**04-02-2025**

**MCOP. No.   151/2019**

**ம.சா.1 – திரு. மகேஷ்**

சாட்சி இன்று அழைக்கப்பட்டு திருமதி. வனிதா, கிரேடு 2 பெஞ்ச் கிளார்க் அவர்களால் உள்ளார்ந்த உறுதி உரை செய்யப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

**1ம் எதிர்மனுதாரர் தோன்றாதர்ப்பினர்**

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டுள்ளார்.**

**2-ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை: 11.50 மு.ப.**

நான் விபத்து சமயத்தில் இருசக்கர வாகனத்தை ஓட்டிச்சென்றேன் என்றால்சரிதான். எனது மனைவியும் மகளும் இருசக்கர வாகனத்தின் பின்னால் அமர்ந்திருந்தார்கள் என்றால் சரிதான். இருசக்கர வாகனத்தின் உரிமையாளரையோ அல்லது காப்பீட்டு நிறுவனத்தையோ தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரிதான். விபத்து சமயத்தில் அதிக எடை மற்றும் கூடுதலான நபர்களை ஏற்றிச்சென்றதாலும் என்னுடைய கவனக்குறைவால் தான் விபத்து ஏற்பட்டது என்று சொன்னால் சரியல்ல.  விபத்து சமயத்தில் ஜீப்பை ஓட்டிவந்த ஓட்டுநர் கவனமாகவும ்சாலை விதிகளை கடைபிடித்து தான் ஓட்டிவந்தார் என்றால் சரியல்ல. ஜீப்பை ஓட்டிவந்த ஓட்டுநர்  இருசக்கர வாகனத்தை நான் பின்புறம் இருநபர்களை உட்கார வைத்துக்கொண்டு சரியில்லாமல் ஓட்டிவருவதை பார்த்து திடீரென பிரேக்போட்டும் நான் தான் ஜீப்பின்மீது மோதி விபத்தை ஏற்படுத்தினேன் என்றால் சரியல்ல. விபத்து சமயத்தில் விவசாய கூலி வேலை பார்த்து  மாதம் ரூ.22,500/- சம்பாதித்து வந்ததற்கான ஆவணம் எதையும் நான் தாக்கல் செய்வில்லை என்றால் சரிதான். விபத்து நடத்தவுடன் போடி அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்த்தார்கள். போடி அரசு மருத்துவமனையில் இருந்து தேனி க.விலக்கு அரசு மருத்துமனைக்கு அனுப்பிவைத்தார்கள். அங்கு உள்நோயாளியாக 3 நாட்கள் சிகிச்சைபெற்றேன்  என்றால் சரிதான்.  நான் தேனி க.விலக்கு அரசு மருத்துமனையில் இருந்து வரும்போது எனக்கு விபத்தினால் ஏற்பட்ட காயங்கள் சரியாகிவிடடது என்று சொன்னால ்சரியல்ல. தேனி க.விலக்கு அரசு

மருத்துமனையில் எந்தவிதமான சிகிச்சை அளித்தார்கள் என்பதை காட்டக்கூடிய விடுவிப்பு அறிக்கை எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ளேன் என்று வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள மதசாஆ–8 ன் தேனி என்ஆர்டி மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக்கொண்டதை நிரூபிக்க மேற்படிஆவணத்தை வழங்கிய நிறுவனத்தினரை என் தரப்பில் சாட்சியாக விசாரிக்கக தயாராக உள்ளேனா என்றால் தயாராக உள்ளேன். மதசாஆ–8 ஆவணத்திற்கும் விபத்தினால் ஏற்பட்ட காயத்திற்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. மதசாஆ–7 ல் உள்ள மருத்துவ பில்கள் இந்த வழக்கிற்காக உற்பத்தி செய்யப்பட்ட பில்கள் என்றால் சரியல்ல. என்னுடைய கவனக்குறைவால் தான் விபத்து ஏற்பட்டது என்றாலும் நான் பொதுசாலையில் வாகனத்தை இயக்கி செல்வதற்கு போதுமான ஓட்டுநர் உரிமம் இல்லாத காரணத்தினால் நான் கோரிய இழப்பீட்டு தொகை பெறுவதற்கு எனக்கு உரிமை இல்லை னஎ்று சொன்னால் சரியல்ல. எனக்கு ஏற்பட்ட விபத்தின் காரணமாக உண்டான காயங்கள் பூரண குணமாகிவிட்டது என்றாலும் நான் தற்போது என்னுடைய அன்றாட வேலையை இயல்பான முறையில் செய்து வருகிறேன் என்றால் சரியல்ல. நான் தற்போதுவரை தொடர்சிகிச்சையில் இருந்து வருகிறேன் என்பதை காட்டக்கூடிய வகையில் ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் நான் அவ்வப்போது செக்அப் செய்து வருகிறேன். என் தரப்பில் தாக்கல் செய்துள்ள பல்வேறு தலைப்புகளின் கீழ் கோரியுள்ள இழப்பீட்டு தொகை மிக அதிகப்படியானது என்றாலும் அதற்கு போதுமான ஆணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. 2ம் எதிர்மனுதாரரை பொறுத்து இந்த மனு தள்ளுபடி செய்யப்படவேண்டியது என்று சொன்னால் சரியல்ல.

மறுவிசாரணை – இல்லை.

விசாரணை முடிக்கப்பட்ட நேரம் : 12.10 பி.ப.

*Taken down by me/before me in open Court interpreted read over to the witness and admitted by the deponent to be correct.*

Digitally signed by G N SARAVANAKUMAR
Date: 2025.02.04 17:53:50 +0530

Chief Judicial Magistrate,
Theni
Date: 04-02-2025